**வடமாகாணக் கல்வித் திணைக்களத்துடன் இணைந்து**
**தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்**
**ஆறாம் தவணைப் பரீட்சை - 2020**
**Conducted by Field Work Centre, Thondaimanaru.**
**In Collaboration with Provincial Department of Education**
**Northern Province**
**6th Term Examination - 2020**

FWC

| தரம் :- 13 (2020) | இலங்கை வரலாறு | புள்ளித்திட்டம் |
|---|---|---|



## பகுதி I

| | | | |
|---|---|---|---|
| 1) 4 | 11) 5 | 21) 1 | 31) 2 |
| 2) 4 | 12) 3 | 22) 5 | 32) 1 |
| 3) 4 | 13) 4 | 23) 5 | 33) 1 |
| 4) 5 | 14) 3 | 24) 4 | 34) 3 |
| 5) 3 | 15) 3 | 25) 3 | 35) 4 |
| 6) 1 | 16) 1 | 26) 1 | 36) 3 |
| 7) 1 | 17) 1 | 27) 1 | 37) 1 |
| 8) 5 | 18) 5 | 28) 5 | 38) 3 |
| 9) 2 | 19) 4 | 29) 3 | 39) 5 |
| 10) 2 | 20) 4 | 30) 3 | 40) 5 |

## பகுதி A

**01. பொருத்தமாக குறிக்கப்பட்டு பெயரிடப்பட்டிருப்பின் ஒவ்வொன்றுக்கும் 1 புள்ளி வீதம் வழங்குக.**

## பகுதி B

**02. 1) தீபவம்சம்**

2) திக்சந்த செனவிய பிரிவென்பதி
மகாநாம தேரர் (கி.பி 5,6 ஆம் நூற்றாண்டு)

3)
- ♦ அனுராதபுர காலத்தில் முதலில் எழுதப்பட்ட வம்சக்கதை தீபவம்சமாகும். இது கவிதை, கட்டுரை நடைகளில் எழுதப்பட்டுள்ளது.
- ♦ 22 அத்தியாயங்களைக் கொண்டுள்ள இந்நூல் கி.மு 6ம் நூற்றாண்டிலிருந்து கி.பி 3ம் நூற்றாண்டு வரை (மகாசேனன் அரசியல், சமய தகவல்களை வழங்குகின்றது.
- ♦ இதன் ஆசிரியர் பெயர் குறிப்பிடாவிடினும் மகாவம்சத்தில் குறிப்பிடப்படாத சில தகவல்களை இது வழங்குகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.
- ♦ பிக்குணிகள் பற்றி அதிகமான தகவல்களை வழங்குவதனால் இது ஒரு பிக்குணியால் எழுதப்பட்டிருக்கலாம் என நம்பப்படுகின்றது.
- ♦ தீபவம்சத்தில் குறிப்பிடப்படும் காலப்பகுதிகளை மையமாகக் கொண்டு மிக எளிய மொழி நடையில் 37 அத்தியாயங்களில் மகாவம்சம் எழுதப்பட்டுள்ளது.
- ♦ திக்சந்த சென்பதி மகாநாக தேரரால் மகாவம்சம் எழுதப்பட்டதாக வம்சத்தப்பகாசினியில் குறிப்பிடப்பட்டுள்ளது. சிங்கள அட்டகதாக்களை வைத்து இதனை எழுதியதாகவும் குறிப்பிடப்படுகின்றது.
- ♦ மகாசேன மன்னன் வரையான தகவல்களை வழங்கும் மகாவம்சத்தில் துட்டகாமினி அரசனிற்கு விசேட இடம் ஒதுக்கப்பட்டுள்ளது.
- ♦ பொருளாதார, சமூக, கலாசார வரலாற்றுத் தகவல்களுடன் பரிபாலன முறைகளை அறிந்து கொள்வதற்கு தீபவம்சம் போன்று மகாவம்சமும் பெரிதும் பயன்படுகின்றது.
- ♦ தாது வங்ஸ, பாளி போதிவங்ஸ என்பன அனுராதபுரக் காலப்பகுதியில் எழுதப்பட்ட வம்சக் கதைகளாக கருதப்படுகின்றது.

agaram.lk

4) ♦ கி.மு 6ம் நூற்றாண்டிலிருந்து மகாசேன மன்ன வரையிலான தொடர்ச்சியான வரலாற்றைக் குறிப்பிடுகின்றது.

♦ தொல்பொருள் மூலாதாரங்களின் மூலம் பெறப்படுகின்ற தகவல்களை உறுதிப்படுத்திக் கொள்வதற்கும் அரசர்களின் பெயர், உறவுமுறை என்பவற்றை தெளிவாக அறிந்து கொள்வதற்கும் இலக்கிய ஆதாரங்கள் துணைபுரிகின்றன.

♦ சமூக கலாசார தகவல்களை இலக்கியங்கள் மூலம் அறிந்து கொள்ள முடிவதுடன் தொல்பொருள் ஆதாரங்கள் மூலமும் அதனை உறுதிப்படுத்திக்கொள்ள முடியும்.

♦ குடியிருப்புக்கள், அதன் பரவல் பற்றி இலக்கியங்கள் குறிப்பிடுவதுடன் அதனை தொல்பொருள் அகழ்வுகள் நிரூபிக்கின்றது.

♦ விவசாயம், வியாபாரம், வெளிநாட்டுத் தொடர்புகள், நீர்ப்பாசன அமைப்புக்கள், நீர்ப்பாசன தொழில்நுட்பம் பற்றி இலக்கிய தகவல்களை தொல்பொருள் மூலாதாரங்கள் மூலம் உறுதிப்படுத்திக் கொள்ளலாம்.

♦ தொல்பொருள் அகழ்வுகளில் கிடைத்துள்ள நபர்களின் பெயர், இடங்கள் என்பவற்றை இனங்காண்பதற்கு இலக்கியங்கள் துணைபுரிகின்றன.

♦ இலக்கிய மூலாதாரங்களான வம்சக் கதைகளில் ஒரு சில குறைபாடுகள் இருப்பினும் தொடர்ச்சியான வரலாற்றை கட்டி எழுப்புவதற்கு இவை பாரிய பங்களிப்பினை வழங்குகின்றது.

**03. 1) மகாநாமதேதர் (மகாவிகாரையைச் சேர்ந்தவர்)**

2) 1. மகாநாகன் 2. ஜட்டாலதீசன்
3. கோதாபயன் 4. கவந்தீசன் / காக்கவண்ணதீசன்

3) கவந்தீசனின் பின் மாகமத்தில் தன்னிகரில்லா வீரனாக விளங்கினான்.

- தனது தந்தையால் ஏற்படுத்தப்பட்ட அரசியல் ஸ்திரப்பாடு, பொருளாதார உறுதி, இராணுவபலம் என்பவற்றைப் பயன்படுத்தி அன்னியரின் ஆக்கிரமிப்பில் இருந்து நாட்டை மீட்டான்.
- துட்டகாமினி எல்லாளனுக்கு எதிராகப் புனிதப்போரை மேற்கொண்டான். பௌத்த சங்கத்தினரின் ஆலோசனை 500 பிக்குகளின் பங்களிப்புடன் படையெடுப்பை மேற்கொண்டான். தாய் விகாரமாதேவியையும் படைகளுடன் அழைத்துச் சென்றான்.
- எல்லாளனுக்கெதிராக மகியங்கனை, அம்பதீர்த்தத்தில் போர் புரிந்து விஜதபுரத்தில் தனது யானைப் படையுடன் எதிர்த்து வெற்றி பெற்றான்.
- சத்திரிய முறைப்படி எல்லாளனுடன் தனித்துப் போர் புரிந்து எல்லாளன் வீழ்ந்த இடத்தில் சைத்தியம் அமைத்து மரியாதை செலுத்தினான்.
- இந்தியாவிலிருந்து எல்லாளனுக்கு உதவ வந்த பல்லுகனை தோற்கடித்தான்.
- இலங்கையை முதன் முதலாக ஒன்றிணைத்து பண்டைய அரசாட்சி முறையை ஏற்படுத்தினான்.

4) • மகாவம்ச ஆசிரியர் தீபவம்சத்தில் 13 செய்யுட்களில் மாத்திரம் காணப்பட்ட துட்டகாமினியின் வரலாற்றை 11 அத்தியாயங்கள் கொண்ட வரலாறாக விபரித்துள்ளார்.

- மகாநாம தேரர் துட்டகைமுனுவைக் காவியத் தலைவனாகக் காட்டுவதற்குரிய முயற்சியில் அவனைத் தன்னிகரில்லாத வீரனாகவும் தந்தை கவந்தீசனை ஒரு கோழையாகவும் குறிப்பிட்டுள்ளார்.

- எல்லாளனைத் தோற்கடிக்க வேண்டிய மூல நடவடிக்கைகளை கவந்தீசன் மேற்கொண்டிருந்தான். அரசியல் பொருளாதார பண்பாட்டு நடவடிக்கைகளை ஸ்திரமாகவும் வலிமையாகவும் மேற்கொண்டிருந்தான். ரோகணத்தின் ஆதிக்கத்தின் கீழ் மகாவலி கங்கையின் கிழக்குப் பாகம் அனைத்தையும் கொண்டு வந்திருந்தான். படைபலத்தை முறியடிக்க முடிந்தமைக்கு காக்க வண்ணதீசனே வழியமைத்திருந்தான். துட்டகாமினியின் புகழை மிகப்படுத்தும் முகமாக கவந்தீசனின் பணிகள் மழுங்கடிக்கப்பட்டு இருந்தன.
- எல்லாளனின் உரோகணப் படையின் முன்னேற்றம் விஜிதபுர மோதல், எல்லாளனுடன் யுத்தம் பற்றிய விரிவான வர்ணனைகள் மிகைப்படுத்திக் ககூறப்பட்டுள்ளன.
- துட்டகைமுனுவின் சமயப்பணிகள் 6 அத்தியாயங்களில் விரிவாகக் கூறப்பட்டுள்ளன. ருவன்வெலிசாய, லோவமகாபாய, மிரிசுவட்டிய நிர்மாணித்தமையில் முக்கிய பங்கு வகித்த சத்ததீசனின் பங்கு சிறியளவே எனக் கூறப்பட்டுள்ளது.
- துட்டகைமுனுவைத் தன்னிகரற்ற காவியத் தலைவனாகச் சித்தரிப்பதற்காக வரலாற்றை விட அதிகமான கற்பனைகள், வர்ணனைகளை மகாநாமதேரர் மகாவம்சத்தில் விபரித்துள்ளார்.

**04. கி.பி. 3ம் நூற்றாண்டிலிருந்து கி.பி. 7ம் நூற்றாண்டு வரையிலான காலப்பகுதியில் இந்நாட்டை ஆட்சி செய்த மகாசேனன், முதலாம் உபதீசன், தாதுசேனன், 2ம் முகலன், 1ம் அக்ரபோதி, 2ம் அக்ரபோதி ஆகியோர் நீர்பாசன பணிகளை முன்னெடுத்துச் சென்றவர்களாவர்.**

- ♦ மகாசேனன் (கி.பி. 275 – 302)
  - விசாலமான நீர்ப்பாசனப் பொறிமுறையமைப்பின் வலைப்பின்னலை மகாசேனனே உருவாக்கினான். 16 குளங்களையும் ஒரு பெருங்கால்வாயையும் அமைத்ததாக மகாவம்சம் கூறும்.
  - மின்னேரியா, கவுடுலு, குருளு, மகாகணதர, மாமினியா, மாகல்கடவல, வாவிகளையும் பப்பந்தக் கால்வாயையும் மகாசேனன் நிர்மாணித்தான்.
  - மணிகிரவாவி எனப்படும் மின்னேரியாக்குளம் 4670 ஏக்கர் விஸ்தீரணமுடையது. மக்கள் இவனை "மின்னேரியாத் தெய்வம்" எனப் போற்றினர்.
  - இலங்கையின் நீர்ப்பாசன பொறிமுறை வரலாற்றில் கி.பி. மூன்றாம் நூற்றாண்டு ஒரு மைல் கல்லாக விளங்குகின்றது.

- ♦ முதலாம் உபதீசன் (கி.பி 365 – 406)
  - 6 குளங்கள் என வரலாற்றுக் கதைகளில் உள்ளது.
  - 3 குளங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இவற்றுள் தோப்பவாவி முக்கியமானது.

- ♦ தாதுசேனன் (கி.பி 461 – 479)
  - 18 குளங்கள், 1 கால்வாய் அமைத்தான் என சூளவம்சம் கூறும்.
  - ஜயகங்கைக் கால்வாய் மூலம் கலாவாவி நீரைத் திஸவாவிக்கு வழங்கினான்.
  - கலாவாவி, மானதுமதுவாவி, மெத்தகுட்டிய வாவி, மகளுவாவி போன்றவை இவனால் அமைக்கப்பட்ட குளங்களாகும்.

- ♦ 2ம் முகலன் (கி.பி 535 – 555)
  - 3 குளங்கள் அமைத்ததாக வரலாற்றுக் கதைகளில் உள்ளது.
  - நாச்சதுவக்குளம் (பத்பகன் குளம்) பதவியாக்குளம் என்பன அறியப்பட்டுள்ளது.

agaram.lk

- *1ம் அக்போ (கி.பி 589 – 623)*
    - இவன் மாடுவாவி, குருந்துவாவி, சிறிவட்டமாகை வாவி மற்றும் மினிப்பே கால்வாயையும் அமைத்தான்.

- *2ம் அக்போ (கி.பி 623 – 633)*
    - சூளவம்சத்தில் 3 குளங்கள் எனவும் பூஜாவலியில் 12 குளங்கள் எனவும், இராஜவலியில் 13 குளங்கள் இவன் கட்டியதாக உள்ளது. கந்தளவாய் குளம், கிரித்தலைக்குளம் முக்கியமானவை. ஹத்தோட்டக் கால்வாய் இவனால் அமைக்கப்பட்டதாகும்.

- மின்னேரி, கிரித்தலை, கவுடுலு, கந்தளாய் ஆகிய குளுங்கள் மகாவலிகங்கை அதன் கிளை ஆறுகளை தொடர்புபடுத்தி அமைக்கப்பட்டவையாகும்.
- பப்பதந்தக் கால்வாய், மினிப்பே கால்வாய், தலவது கால்வாய், ஹத்தோட்ட அணை என்பன மகாவலிக்கு அருகில் அமைக்கப்பட்டவையாகும்.
- இந்நாட்டின் நீர்ப்பாசன வரலாற்றில் "முதலாம் பொற்காலம்" கி.மு. 3ம் நூற்றாண்டு தொடக்கம் 7ம் நூற்றாண்டு வரை எனக்கருதப்படுகிறது.

**05. பொருத்தமான விடயங்களை கொண்ட சிறுகுறிப்பு ஒன்றுக்கு 08 புள்ளி வீதம் வழங்குக.**

## பகுதி C

**06.** ♦ இரண்டாம் இராஜசிங்கன் போர்த்துக்கேயருக்கு எதிராக மேற்கொண்ட நடவடிக்கைகள்.

- போர்த்துக்கேயர் கண்டி இராச்சியத்தின் மீது மேற்கொண்ட படையெடுப்பில் அவர்களைத் தோற்கடித்தல். 1630 ரந்தெனிவலப்போர் 1638 கன்னொருவாப்போர்.
- போர்த்துக்கேயரை இலங்கையிலிருந்து அகற்ற வேறொரு வெளிநாட்டவரின் உதவி தேவை என்பதை உயர்ந்து, 1638ம் ஆண்டு ஒல்லாந்தருடன் உடன்படிக்கை செய்தல்.
- ஒல்லாந்தருடன் இணைந்து போர்த்துக்கேயரை இந்நாட்டிலிருந்து அகற்றுதல்.
- 2ம் இராஜசிங்கனால் ஒல்லாந்தரது ஆதிக்கம் கட்டுப்படுத்தப்படல்.
- உடன்படிக்கையை மீறி ஒல்லாந்தர் இலங்கையில் தொடர்ந்து நிலைத்திருத்தல். போர்த்துக்கேயரின் ஆட்சியின் கீழ் இருந்த பிரதேசங்களில் பெரும்பகுதியை அவர்கள் கைப்பற்றல்.
- படிப்படியே அவர்களது ஆட்சியைத் தளர்வுறச் செய்ய நடவடிக்கை எடுத்தல்.
- 1670 – 1675 இற்கு இடைப்பட்ட காலத்தில் 2ம் இராஜசிங்கனால் ஒல்லாந்தரின் கீழ் இருந்த பிரதேசங்களில் பெரும் பகுதி கண்டி இராச்சியத்துடன் இணைக்கப்படல்.
- அதன் பின்னர் ஒல்லாந்தர் கண்டி மன்னரை மதித்து நடத்தல்.
- மலையக மன்னர்களுள் மலையக சுதந்திரத்தையும் கரையோர பிரதேசங்களையும், ஐரோப்பிய ஆதிக்கத்தினின்றும் நீக்கப் போராடிய இறுதி மன்னனாகப் போற்றப்படுகின்றான்.

**07. வெளிநாட்டு ஆதிக்கத்தை நீக்கி, உள்நாட்டு ஆட்சியாளன் ஒருவரின் கீழ் உள்நாட்டு ஆட்சியை அமைத்தல் என்பதே சுதந்திரப்போர்.**

- 1815 இல் நாடு முழுவதும் ஆங்கிலேயரின் ஆட்சியின் கீழ்வந்த பின்னர் ஏற்பட்ட முதலாவது ஆங்கில எதிர்புக்கலவரம் இதுவாகும்.
- 1815 ஆம் ஆண்டு உடன்படிக்கையின்படி கண்டி இராச்சியத்தில் நிலவிய முடியாட்சியை நீக்கி, அங்கு பிரித்தானிய ஆட்சி நிறுவப்பட்டதால் கண்டி இராச்சியம் தன் சுயாதீனத்தை இழந்தது.

agaram.lk

- *1817 – 1818 இல் கண்டி இராச்சிய மக்கள் ஆங்கிலேயருக்கு எதிராகப் போராடினார்கள்.*
- *வெளிநாட்டவரின் அச்சுறுத்தல்களுக்குத் தைரியமாக முகங்கொடுத்த கண்டி இராச்சிய மக்கள், ஆங்கிலேயரின் ஆட்சியில் சுயாதீனத்தை இழந்தமை கலவரத்திற்கு முக்கிய காரணமாக மாறியது.*
- *1815 ஆம் ஆண்டு உடன்படிக்கையில் கண்டி இராச்சியத்தின் ஆட்சிமுறை, பிரதானிகளின் அதிகாரங்கள், சலுகைகள் என்பன பாதுகாக்கப்படும் என்று உறுதியளித்த ஆங்கிலேயர் தமது ஆட்சியில் அவை அனைத்தையும் செயற்படுத்தாமை கலவரத்திற்கு வழிவகுத்தது.*
- *உடன்படிக்கையில் பௌத்த மதமும், மதம் தொடர்பான உடைமைகளும் பாதுகாக்கப்படும் என்று உறுதியளிக்கப்பட்ட போதிலும் அரசர்கள் காலத்தில் தமக்கு கிடைத்த உதவியும் கௌரவமும் கிடைக்காமையால் பிக்குகள் மனந் தளர்ந்தனர். பௌத்த அரசன் ஒருவனை நியமிப்பது அவர்களது நோக்கமாகவும், எதிர்பார்ப்பாகவும் அமைந்தது.*
- *தம்மால் காணமுடியாத அரசனுக்கு சார்பாக செயற்படுவதற்கு மக்கள் விரும்பவில்லை. முன்னர் நிலவிய முடியாட்சியையே விரும்பினர்.*
- *ஊவா வெல்லஸவில் முஸ்லீம் முகாந்திரம் நியமிக்கப்பட்டமையே உடனடிக் காரணமாகியது.*
- *எனினும் இந்தப் போராட்டம் கண்டி இராச்சியத்துக்குள் மட்டுப்படுத்தப்பட்டமை, கண்டி இராச்சியத்தில் சில பிரதேசங்களில் முக்கிய பிரதானிகள் ஒத்துழைப்பு வழங்காமை ஆகியவற்றைக் கொண்டு இது முழுமையான ஒரு சுதந்திரப் போராட்டம் அல்ல எனத் தர்க்க ரீதியாக விவாதிக்கலாம்.*

**08.** ◆ *பிரித்தானிய முடியுடன் இருந்த தொடர்புகள் முடிவுக்கு வரல்.*

- *சுயநிர்ணய அரசாகப் பிரகடனப்படுத்தப்படல்.*
- *தேசாதிபதிப் பதவி நீக்கப்படல்.*
- *பிரிவிக் கவுன்சலுக்கு முறையீடு செய்வதற்கு இருந்த உரிமை நீக்கப்படல்.*

◆ *மக்கள் ஆட்சி யாப்பு அறிமுகம் செய்யப்பட்டமை*

- *பெயரளவிலான அதிகாரமுடைய ஜனாதிபதி*
- *பிரதம மந்திரியும் அமைச்சரவையும்*
- *பாராளுமன்றத்திற்குப் பதிலாகத் தேசிய அரசுப் பேரவை அனைத்துப் பிரதிநிதிகளும் தேர்தல் மூலம் நியமிக்கப்படல், நியமன அங்கத்தவர் முறை ஒழிக்கப்பட்டமை.*
- *உயர் நீதிமன்றத்திற்கு உயர் அதிகாரங்கள் வழங்குதல்.*
- *சிறுபான்மையினர் தொடர்பாக அரசியல் யாப்பிலேயே அடிப்படை உரிமைகள் தொடர்பான விடயங்களை உள்ளடக்குதல்.*

◆ *சட்டமன்ற ஆட்சி தொடர்பான பொறுப்பு*

- *சட்டம் அமுல் செய்யப்படும் போது 1948ம் ஆண்டு யாப்பில் இருந்து 29 (2) போன்றவற்றிற்குக் கட்டுப்பாடின்மை.*
- *பிரதமர் தலைமையிலான அமைச்சரவை.*

***09. பொருத்தமான விடயங்களை கொண்ட சிறுகுறிப்பு ஒன்றுக்கு 8 புள்ளிகள் வீதம் வழங்குக.***

agaram.lk